தனிநாடு கோருவது எப்படி வகுப்புத்துவேஷம் ஆகும்?

"கொடுமை களையப்பட வேண்டும்" என்பது குற்றமாகாது;

..................(:—:)..................

ஆரியர்கள் என்பது பிராமணர்தானா?

..............(—)..............

"இலட்சிய வரலாறு" வழக்கு விசாரணை விவரம்

Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5468

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (1—7—50) | வெளியூர் (2—7—50) | இதழ் 293

சென்னை, ஜூன் 29

இன்று மாலை 2 மணிக்கு தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் மீது தொடரப்பட்டுள்ள 'இலட்சியவரலாறு' வழக்கு மர்காண முதல்மாஜிஸ்ட்ரேட் தோழர் ராமசாமிக்கவுண்டர் முன்பாக மீண்டும் விசாரணைக்கு வந்தது எதிரிகளான சி என். அண்ணாதுரை, கண்ணப்பன், டி. வி. முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் வந்திருந்தனர் கோர்ட்டில்; பொது மக்களும் ஏராளமாக வந்து குழுமியிருந்தனர். இரு தரப்பு வக்கீல்களின் வாதங்களும் நடைபெற்றது. தோழர் சி. என். அண்ணாதுரை சார்பில், வழக்கறிஞர் நாராயணசாமி வாதித்தார். முதலில் சர்க்கார் தரப்பு வக்கீல் தோழர் அத்தனிஷிய ?? தனது வாதத்தை ஆரம்பித்து 'இலட்சியவரலாற்'றில் உள்ள 5பகுதிகளைக் குறிப்பிட்டு, அவை 153 ஏ. பிரிவுப்படி பார்ப்பன சமூகத்திற்கு எதிராக வகுப்பு துவேஷத்தைத் தூண்டுவது எனவாதித்தார். 'இலட்சியவரலாறு' ஏட்டிலுள்ள 18-வது பக்கத்தில்,

"அந்த அணிவகுப்பைக்கண்டு ஆரியம் அலற உலகம் உணர ஒரு அணிவகுப்புத் தேவை! விரைவாகத் தேவை! வேலை மிகுதியாக இருக்கிறது, விடுதலை முரசு கொட்டப்பட்டுவிட்டது இன அரசுக்குப் போர், இறுதிப்போர் நடந்தாக வேண்டும். இன்றே இளம் புக திராவிடர் பாசறை நிறுவி, பலப்படுத்த"

என்ற முதல் பகுதியைக் கூறி, இது, போருக்குக் கிளம்புங்கள் பார்ப்பனர்களுக்கு எதிராக என்பதாய் உள்ளது. இது பலாத்காரத்தைத்தூண்டுவதாய் உள்ளது என்றார். இரண்டாவது பகுதியான

"இது பார் ஒரே காடாக இருக்கிறது என்று கூறித்தான் ஆரியர்கள், இமயம் முதல் குமரிவரை உள்ள இடத்தை தமது வேட்டைக் காடாக்கிக்கொண்டு, அரசியலில் அதிகாரிகளாய், கல்வியில் ஆசான்களாய், மதத்தில் குருமார்களாய், சமுதாயத்தில் பூதேவர்களாய், பொருளாதாரத்தில் பாடுபடாது உல்லாச வாழ்வு வாழக்கூடியவர்களாய் இருக்கவும், மற்ற இனத்தவர் தாசர்களாய், பாட்டாளிகளாய், உழைத்து உருவின்றிச் சிதைப்பவர்களாய் வாழவும் நிலைமை ஏற்பட்டது. இக்கொடுமை நீங்க வர்க்கத்திற்கொரு வட்டாரத்தைப்பிரப்பதுதான் சிறந்த வழி"

என்பதைப்படித்துக்காட்டி. வர்க்கத்திற்கு ஒரு வட்டாரம் என்பதன் மூலம் அதைப்பிடிக்காத பார்ப்பனர்களுக்கும் மற்றவர்களுக்கும் வெறுப்பு ஏற்படுமல்லவா? பார்ப்பனர்கள் முன்னேறியிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் மீது துவேஷம் எழுக் காரணம் இருக்கிறது.

மாஜிஸ்ட்ரேட்: இதில் திராவிடநாடு வேண்டும்என்று தானே இருக்கிறது இது எப்படி வகுப்புத் துவேஷத்தைத் தூண்டும்?

சர்க்கார் வக்கீல்:—இல்லை. பிறர் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள் என்று சொன்னால்,

(3-ம் பக்கம் பார்க்க)

கொரியாவுக்கு உதவ காமன்வெல்த் படை திரட்டுகிறது

ஓயிட் ஹால் ஏற்பாடு

லண்டன், ஜூன் 30—

தென்கொரியாவுக்கு காமன்வெல்த் நாடுகளின்படைகளைத் திரட்டி அனுப்ப முழுமூரான முயற்சி ஆரம்பமாகிவிட்டது.

காமன்வெல்த் நாடுகளுடன் ஓயிட் ஹால் இவ் விஷயமாக, தொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

கொரியாவுக்கு எத்தகைய வெடி விமானங்கள், எவ்வளவு படைகள் அனுப்ப முடியும் என்று, ஆஸ்திரேலியா [illegible] பிரதமர் மென்ஸிஸை ஓயிட் ஹால் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதுபோல் நியூஜிலாந்தை கடற் படையில் எவ்வளவு கப்பல்கள் உதவ முடியும் என்று கேட்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதுபோல் படைகளை அனுப்பி உதவும்படி கனடா தென்னாப்பிரிக்காவையும் ஓயிட் ஹால் கேட்டிருக்கிறதாம்.

இப்பொழுது ஜப்பானிலுள்ள ஆஸ்திரேலியப்படைகள் அவசியமானால் மக்ஆர்தருக்கு உதவ அனுமதிக்கப்படும்.

கொரியாவில், கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றுவிட்டால் கம்யூனிஸ்டுகள் சிங்கப்பூர் வருமவரை அவர்களை தடுத்து நிறுத்த முடியாது என்று, ஆஸ்திரேலியா மந்திரி சபை அபிப்பிராயப்படுகிறது.

கொரியாவில் ஆக்ரமிப்பை ஒடுக்கவேண்டும் என்கிற விஷயத்தில் ஆஸ்திரேலிய சர்க்கார் மனப்பூர்வமாக ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது.

"கருஞ்சட்டை ஒழியவேண்டுமா?" வழக்கு

சென்னை ஜூன் 29—

"கருஞ்சட்டை ஒழியவேண்டுமா?" நூல் சம்பந்தமாக தோழர் 'விபாழன்' (புலவர் செல்வராஜ்) அவர்கள்மீதும், அச்சிட்டோர் வெளியிட்டோர் ஆகியோர் மீதும் தொடரப்பட்டுள்ள வழக்கு, ஜூலை 5-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

போர்மோசா தாக்கப்படலாம்

————(0)————

தென் சீனக்கடலில் துருப்புபடகுகள்

லண்டன், ஜூன் 30—

தென் சீனக் கடலில் அங்கங்கே படகுகளிலும் தோணிகளிலும் துருப்புகள் காணப்படுவதாகவும் இவைகளை ஜப்பானிலிருந்து சேர்ந்து சென்ற அமெரிக்க விமானங்கள் போட்டோ எடுத்துவந்திருப்பதாகவும் தெரியவருவதாக. குளோப் ராஜதந்திர நிருபர் அறிவிக்கிறார்.

இவை போர்மோஸவைத் தாக்குவதற்கான ஆயத்தமாக இருக்கலாம் என்று அவர் கூறுகிறார்.

இந்த போட்டோக்கள் [illegible] எடுக்கப்பட்டு [illegible] காடியிலுள்ள அமெரிக்க கமாண்டர்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கம்யூனிஸ்டு வசமுள்ள அமாய்பூச்சோ, ஸ்வாடோ ஆகிய துறைமுகங்களுக்கருகில், துருப்புகள் கொண்ட படகுகள் ஏராளமாகக்காணப்படுகிறதென்று சொல்லப்படுகிறது.

கொரியா பற்றி கிருஷ்ண மேனன்

லண்டன், ஜூன் 30—

[illegible] சமையிலுள்ள அனல் நாட்டு [illegible] மந்திரி அறையில் நடைபெற்ற காமன்வெல்த் ஹை கமிஷனர்கள் கூட்டத்தில் கொரிய [illegible] பற்றி விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இந்தியாவின் சென்னைகளை இந்திய ஹை கமிஷனர் தோழர் கிருஷ்ண மேனன் விளக்கியதாகத் தெரிகிறது.

இக்கூட்டம் வழக்கமாக நடைபெறுவதுதான் என்றும் இதில் விசேஷ முக்கியத்துவம் எதுவும் இல்லை என்றும் கூறப்படுகிறது.

—ருவேஸ்

கொரியாவில் பொன்விளையும் பூமி ரஷ்யர் வசம்

————(0)————

சகாங் எல்லைகள் மூடப்பட்டன

லண்டன் ஜூன் 30—

கொரியாவிலேயே ஏராளமாக தங்கம் அகப்படும் இடமான வடமேற்கு மாகாணம் சகாங்கை ரஷ்யர்கள் எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி தங்கள் வசப்படுத்திவிட்டனர் என்று குளோப் நிருபர் கூறுகிறார்.

இம்மாகாண எல்லைகளை ரஷ்யர்கள் மூடிவிட்டனர் என்றும் [illegible]ப்படுகிறது.

[illegible] தென்கொரியாமீது படை[illegible]டுப்பு ஆரம்பமாவதற்கு முன்பே, ரஷ்யா இம்மாகாணத்[illegible] வசப்ப[illegible] முயற்சி செய்துவந்ததெனக் கூறப்படுகிறது.

வடகொரியாவைச் சாண்டி எல்லாபொருள்களையும்ரஷ்யா பெற்றுவந்ததென்று, அகதிகள் கூறுவதிலிருந்து தெரியவருகிறது. இதற்கு பதிலாக ரஷ்யா, வடகொரியாவுக்கு ஆலோசகர்களையும் டெக்னீஷியர்களையும் கொடுத்துவந்ததாம்.

வடகொரியாவில் உற்பத்தியான 800 000 [illegible] அரிசியில், குறைந்தது 15[illegible] அரிசியை ரஷ்ய[illegible] யோகித்திருக்கிறதாம்.

ஐ. நா. முடிவை ஏற்றுக்கொண்டது இந்தியா

————(...)————

கொரியாப் பேர் பற்றி இந்திய சர்க்கார் முடிவு

புதுடில்லி, ஜூன் 29—

கொரியாப் பேர் சம்பந்தமாக, பாதுகாப்புக் கவுன்சில் செய்துள்ள இரண்டாவது தீர்மானத்தை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டுவிட்டது.

பாதுகாப்புக் கவுன்சிலின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதால் இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கையில் மாறுதல் ஏதும் இருக்காது என்றும், கொரியப்போரை மத்தியஸ்தர் மூலம் தீர்ப்பதில் நம்பிக்கை கொள்ளுகிறது என்றும் சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

போரல்ல: போலீஸ் நடவடிக்கையே

வாஷிங்டன், ஜூன் 29—

"கொரியாவுக்கு யு. எஸ். உதவி அளிக்க முன்வந்திருப்பது கொரி[illegible] குடியரசைத் தாக்கும் கொள்ளை கூட்டத்தினரை [illegible] ஐ. நா. சபை மே[illegible]ளும் ஒரு போலீஸ் நடவ[illegible]யாகும்." என்று அமெரிக்க [illegible]த் தலைவர் தோழர் ட்ரூமன் [illegible]

மலேயாவுக்கருகில் பிரிட்டிஷ் கப்பல்க[illegible]

சிங்கப்பூர், ஜூன் [illegible]

இரண்டு பிரிட்டிஷ் [illegible] கப்பல்கள் ஜப்பானுக்கு [illegible] நடமாட்டம் என்று [illegible] தெரிய வருகிறது அ[illegible] பட்டால் இம்மாதில் [illegible] தக் கமாண்டருக்கு அ[illegible] கப்பல்கள் சென்ற [illegible] சேரி ஒருவர் கூறினார் மலேயா [illegible] டத்தில் முன்னேற கம்யூனிஸ்டுகள் [illegible] புருஷர்கள் [illegible] இவை [illegible] காணித்து வருகின்றனவாம்.

மாலை மணி

சென்னை 1—7—50 சனிக்கிழமை

தெளிவுவேண்டும்

"கல்யாணம் பண்ணியும் சந்நியாசி, 'கடன் வாங்கியும் பட்டினி'" என்றொரு பழமொழி நாட்டில் வழங்கிவருவது உண்டு.

இந்தப் பழமொழி, சென்னை மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், முற்றிலும் உண்மையாகிவிட்டது. நாட்டிற்கு உரிமை வழங்கப்பட்டுவிட்டது, ஆனால், சென்னை மாநிலம் இன்னமும் அடிமை நிலையில்தான் இருக்கிறது. முன்பெல்லாம் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டிருந்தது. இப்பொழுதோ அந்த நிலை மாறி, வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டுக்கிடக்கிறது. முன்பெல்லாம், நாடு உரிமை பெறவில்லை. ஆகவே, ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அடிமை என்று கருதப்பட்டது. இப்பொழுதோ எனில், நாடு சுதந்திரம் பெற்றுவிட்டதாகச் சொல்லப்படுகிறது; ஆனால் சென்னை மாநிலமோ, சுதந்திரத்தை நுகரமுடியவில்லை, வடநாட்டிற்கு அடிமைப்பட்டே கிடக்கிறது. "கல்யாணமாகியும் சந்நியாசி" என்ற கதை போல.

"கடன்வாங்கியும் பட்டினி" என்ற கருத்தும் முழுக்க முழுக்க அப்படியே பொருந்துகிறது சென்னை மாநிலத்திற்கு. சென்னை அரசாங்கம், எத்தனையோ முறை, எவ்வளவோ கடன்கள் வாங்கிவிட்டது. இன்னமும் பட்டினிப் பட்டாளத்தைக் குறைக்கமுடியவில்லை. கடன்கள் ஏறிக்கொண்டேயிருக்கின்றன. என்றாலும், பஞ்சம், பட்டினி நீங்கினபாடில்லை.

உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமானால், நீர்ப்பாசனத்திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்றும், நீர்ப்பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டுமானால், கோடிக்கணக்கான ரூபாய்களைப் பொதுமக்கள் கடன் தொகையாகக் கொடுத்து உதவவேண்டும் என்றும், தொழிலதிபர்கள் மற்றவர்களைக் காட்டிலும் சற்று அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், சென்னை முதலமைச்சர்தோழர் பி. எஸ். குமாரசாமிராஜா தென் இந்திய வர்த்தக சங்க ஆண்டு விழாக் கூட்டத்தைத் துவக்கிவைக்கும்போது குறிப்பிட்டுள்ளார்.

கடன் வாங்குவது எப்போது கடும்பசியைத் தீர்ப்பது எப்போது என்பது ஒரு [புறம்] இருந்தாலும், [illegible] கொடுத்ததவும் நம் [illegible]யில், மக்கள் இல்லை [illegible] கேவிட்டபடியாகத் [illegible]. ஏழைகளிடம் [illegible]; எனவே, அவர் [illegible] முடியாது. [illegible] அல்லது முத[illegible] தங்கள் பணத்தைத் [illegible] தொழிலில்லை [illegible] கண்ணிப் [illegible] ஒன்று, பத்து, நூறாகப்பெருக்கிக்கொள்ளவே நினைக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் இன்றைய அரசாங்கத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கை அனைத்தும் பொது மக்கள் உள்ளத்திலிருந்து அற்றுப் போய்விட்டன. இந்த அரசாங்கத்திற்கு நல்ல திட்டமுமில்லை; திட்டவும் திறமையில்லை; திட்டப்பட்டிருக்கும் திட்டங்கள் மூலமாகப் பணம் பாழாவதுதான் மிச்சமேயொழிய, உருவான பலன் ஏதும் ஏற்படவில்லை என்பதைப் பொதுமக்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய காங்கிரஸ் சர்க்கார், இலட்சியத்திற்காகச் சில கவைக்குதவாத் திட்டங்களைப் போட்டு, வருமானத்தைத் தொலைத்து, நிறைய வரிபோடுகிறது என்று, தென் இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவர் கூறியிருப்பது மிகப் பொருத்தமுடையதேயாகும்; அதுதான் உண்மையுங்கூட.

பிர்க்கா அபிவிருத்தி, கதர் உற்பத்தி, இந்திமொழி வளர்ச்சி ஆகிய திட்டங்கள் மக்களுக்குச் சிறிதளவும் பயன்படாத்திட்டங்கள், எனினும் அவைகளை இலட்சியம் காரணமாகக் காங்கிரஸ் சர்க்கார் பெருஞ்செலவில் நிறைவேற்றி வருகின்றனர். அவற்றின் மூலமாக இலட்சக் கணக்கான கோடிக் கணக்கான ரூபாய்கள் பாழ்படுத்தப்படுகின்றன. மேலும் மந்திரிகள் சுற்றுப்பிரயாணம், விருந்துபவம், கேளிக்கை கூத்துக்கள் போன்ற ஆடம்பர வகைகளுக்கும், தேவையற்றத் திட்டங்களுக்கும் ஏராளமான பணம் செலவழிக்கப்படுகிறது. இப்படியெல்லாம் பாழாகும் பணத்தைத் தேக்கிவைக்க முயலுமானால், சென்னை மாநில அரசாங்கம் பொதுமக்களிடம் கெஞ்சிக்கேட்டுக், கடன் வாங்கவேண்டிய அவசியமே இராது—பொது மக்களிடம் அமைதிப்பும், அவநம்பிக்கையும் கொள்ளவேண்டிய அவசியங்கூட ஏற்பட்டிருக்காது!

மேலும் மதுவிலக்குத் திட்டத்தால், அரசாங்க வருமானத்தில் ரூ 17 கோடி நஷ்டம் ஏற்படுவதுதான் மிச்சமேயொழிய, பொது மக்களின் நிலையில் எவ்வித நல்லமாற்றத்தையும் காட்ட முடியவில்லை. காரணம், திட்டம் திறமையாக நிறைவேற்றப்படவில்லை—மக்களின் தயாகள் போக்கப்படவேண்டிய அளவுக்குப் போக்கப்படவில்லை. இப்படியாகத் திறமையின்மையாலும், ஏற்றத் திட்டம் இன்மையாலும் பொது மக்களின் நம்பிக்கையை, இன்றைய காங்கிரஸ் அரசாங்கம் இழந்துகொண்டே வருகிறது!

இன்[illegible] ஆளவந்தார்களுக்கு[illegible]மையில்லை என்பது [illegible], தெளிவும் இல்லை! எப்படி எனில், சென்னை முதலமைச்சர் கதர் உற்பத்திப் பெருமையை ஓரிடத்தில் குறிப்பிட்டுவிட்டு, மற்றோர் இடத்தில் மின்சாரத்தின் மகிமையைப்புகழ்ந்து பேசுகிறார். கதர்-மின்சாரம்இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கும் தொழில்கள்! இரண்டையும் புகழ்கிறார் முதலமைச்சர். "20 ஆண்டுகளுக்குமுன் கோயம்புத்தூர் நகரைப் பார்த்தவர்கள், இன்று இந்நகரைக் கண்டால், மின்சார சக்தி எப்படி ஒரு பிரதேசத்தின் பொருளாதாரத்தை மாற்றிவிட முடியும் என்பதை உணர்வார்கள்" என்று கூறுகிறார். கோயம்புத்தூரை, மின்சார சக்தி, எதன் மூலம் முதலமைச்சர் வியந்து கூறும் அளவுக்கு மாற்றிற்று என்றால். பஞ்சாலை மூலமாக. மின்சாரத்தின் உதவிகொண்டு, பஞ்சாலை மூலம் துணி நெய்தால பொருளாதார ஏற்றம் ஏற்படுவதைக் கோவை நகரைப் பார்த்துஅறிந்துகொண்ட முதலமைச்சர் தோழர் ராஜா, கதர் உற்பத்தித் திட்டம் மக்களுக்கு நன்மை செய்திருக்கிறதுஎன்று, அதே கூட்டத்தில் கூறுகிறாரென்றால், அதில் தெளிவோ, திறனோ இருக்கின்றது என்று எப்படிக் கூற முடியும்?

நாட்டின் பொருளாதாரத்தையும், வளத்தையும், உற்பத்தியையும் பெருக்கக் கூடியது மின்சாரமா? கைராட்டினமா?-இயந்திரத்தொழிலா?குடிசைத் தொழிலா?—தொழில் அபிவிருத்தித் திட்டமா? பிர்க்கா அபிவிருத்தித் திட்டமா? என்பனபற்றி உள்ளபடியே ஆளவந்தார்களுக்குத் தெளிவு பிறக்கவேண்டும். தே[illegible]யை புணரும்தெளிவுவேண்[டும்]. [அ]ந்தத்தெளிவு பிறந்துவிட்டால். பணம் பாழாகாது—நிச்சயம் பயன்பட்டே தீரும்! கடன் கேட்கவேண்டிய அவசியம் ஏற்படாது—கவலை ஒழிந்து தொலையும்!

மோட்டார் விபத்து

லண்டன், ஜூன் 30—

இந்திய ஹைகமிஷனர் காரியாலயத்தில் அயல்நாட்டிலாகா காரியதரிசியான தோழர் பி. என். ஹக்ஸார் கெண்டில் மோட்டார் விபத்திற்கு உள்ளானார். இவருக்குநேரம் [illegible] எலும்பு முறிந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

ஜினிவாவில் நிகழவிருந்த ஆரம்ப மாகாநாட்டிற்கும் ஐ. நா. பொருளாதார சமூகக் கௌன்ஸிலில்கலந்து கொள்வதற்காகவே இவர் டோவருக்குச் செல்லும் வழியில் இவ்விபத்து நேரிட்டது.

அவர் அக்கூட்டத்தில் கலந்துகொள்ளும்படியான நிலைமையில் இல்லை.

ஜினிவா கௌன்ஸில் கூட்டத்திற்குப் புது பிரதிநிதியை நியமிக்கவேண்டியது இந்திய சர்க்கார் செய்யவேண்டிய வேலையாகும் என்று 'இந்திய நியூஸ்' அறிவிக்கிறது.

லியோபால்ட் அரசர் பதவிக்கு திரும்புவது நிச்சயம்

பிரஸ்ஸல்ஸ், ஜூன் 30—

ஸ்விட்ஸர்லாந்தில் லியோபால்ட் மன்னரை சந்தித்துப் பேசியபின் பெல்ஜிய பிரதமர் தோழர் [illegible] ஸாட் இவரை திரும்பக்[illegible]கிறார். பார்லிமெண்ட் கூட்டு[illegible] [illegible] நிர்வாகம் [illegible] வடையும் தீர்மானம் நிறைவே[illegible] பின் லியோபால்ட் மன்னர் த[illegible] மகன் படோயினுடன் பெல்ஜியத் திருக்குவ[illegible]னர்.

நன்றி அறிவிப்பு

ஆரணி, ஜூன் 29—

ஜூன் 24, 25 சனி ஞாயிறு கிழமைகளில் இங்கு நடைபெற்ற வ. ஆ மாவட்ட தி. மு. கழக முதல் மாநாட்டிற்கு துவக்கமுதல் உடனிருந்து பெரும்பொருப்பெற்று மாநாடு சிறப்புற நடக்க உதவிய தோழர்கள் திருவத்திபுரம் கே. கோவிந்தன் பி. ஓ. எல்., போளூர் கே. சுப்ரமணியம் அவர்களுக்கும் மற்றும் மாவட்ட சுற்றுப்பிரயாணத்தில் உடனிருந்து நிதி வசூலித்துத் தந்தவர்களுக்கும், மாநாட்டு அலுவல்களை உடனிருந்து நடத்திக்கொடுத்த உள்ளூர்த் தோழர்களுக்கும் தொண்டர்களாயிருந்து பல வகையிலும் சிறந்த பணியாற்றிய தொண்டர் படையினருக்கும் சிறந்த முறையில் மின்சார விளக்குகள், ஒலிபெருக்கி அமைத்து உதவிய கணேசர் கம்பெனி உரிமையாளர் கே. ஜம்புலிங்கம் அவர்களுக்கும் மிக குறுகியகாலத்தில பெரும் அளவிலும், அழகாகவும் பந்தல் அமைத்துக் கொடுத்த திருவண்ணமலை தோழர் ஆறுமுகம் அவர்களுக்கும் மாநாட்டில் தலைமை தாங்கிய தோழர் க. அன்பழகன், துவக்கிவைத்தத் தோழர் எம். எஸ். ராமசாமி சொற்பொழிவாற்றியதில் பெரும் பங்கு கொண்ட தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் சி. பி. சிற்சிற்றரசு மற்றுமுள்ள சொற்பொழிவாளர்களுக்கும், பொதுச் செயலாளர் அண்ணா அவர்களுக்கும், மாநாட்டில் முதல்நாள் இரவுநாடகம்நடத்திக் காண்பித்த சென்னை முன்னேற்ற நடிகர் குழுவினர்க்கும், இரண்டாம்நாள் சந்திரமோகன் நாடகத்தை நடித்த நடிப்புப் புலவர் கே. ஆர்.ராமசாமி அண்ணா மற்றும் நடிகர் குழுவினர்க்கும் எங்கள் அழைப்பை ஏற்றுமாநாட்டில் கலந்துகொண்ட எல்லாத் தோழர்களுக்கும் மாநாட்டிற்கு பலவகையில் பொருள் உதவியவர்களுக்கும் சிறந்த வகையில் சிற்றுண்டி உணவு அளித்து உதவிய மதுரை முனியாண்டி விலாஸ் உணவு விடுதி உரிமையாளர்களுக்கும் வரவேற்புக்குழுவினர் சார்பாக எனது மகிழ்ச்சியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

கே. பி. சுந்தரம்

வரவேற்புக் குழுத் தலைவர்

பிறக்கும்போதே 17 பவுண்டு எடை!

டப்ளின், ஜூன் 29—

அயரின் வி[illegible] என்ற இடத்தில் இதுவரை உலகிலேயே பிறவாத அளவுக்கு பெரிய குழந்தை பிறந்திருக்கிறது. பிறக்கும்போதே இக்குழந்தை 17 பவுண்டு 3 அவுன்ஸ் எடை இருந்ததாம் (சாதாரணமாக ஒரு குழந்தை பிறக்கும்போது 7 பவுண்டு எடைதான் இருப்பது வழக்கம்) இக்குழந்தை [illegible] உலகில் [illegible] ஏற்படுத்தி[illegible]கிறது.

சென்ற ஆண்டு தென்னாப்பிரிக்காவில் [illegible] என்ற இடத்தில் [illegible] குழந்தை பிறந்தது. [illegible]5 பவுண்டு 3 அவு[illegible] [illegible]ருந்ததாம்.

—ரே[illegible]

ஆசிரியருக்கு முடங்கல்:

பங்கீட்டு அதிகாரிகள் கவனிப்பார்களா?

பட்டாபிராம் (ஆவடி) கிராமமக்களுக்கு உணவுப்பொருள் விநியோகிக்கும் பங்கீட்டுக் கடை இரண்டு (செ 51. 82/49) பட்டாபிராம் [illegible] தண்டுரை கிராமத்தில் இருக்கின்றன. அவர்கள் மாதத்தில் மூன்று நாட்களே எங்களுக்கு பச்சரிசிதான் கொடுத்து வருகிறார்கள், ஒரு ரூபாய்க்கு ஒரு படி, மூன்று ஆழாக்கு வீதம். அதை வாங்கிக் குத்தி, புடைத்து எடுத்தால், முக்கால்படி தேறுவதே அபூர்வம். ஏன்? உளுத்துப்போன பூசி [illegible] மேலும், [illegible]. [illegible] நிறைந்து [illegible] கள்ளச்சந்தை தலைகாட்டியிருக்கிறது. மக்களுக்கு வேறு வழியில்லை. நல்ல அரிசி வாங்கி உண்ணவேண்டுமானால், கள்ளச்சந்தையில்தான் வாங்கித்தீர வேண்டிய நிலையிலிருக்கிறார்கள். கள்ளச்சந்தையிலோ ஒருபடி அரிசி 1—2—0. என்ற எளிய மக்கள் [illegible] இருவுமா?

எனவே, பங்கீட்டு அதிகாரிகள் இது சம்பந்தமாகக் கவனித்து, தண்டுரை கிராம அரிசி பங்கீட்டுக் கடைக்கு நல்ல புழுங்கல் அரிசி அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும். அதனால், மக்கள் பணம் கொடுத்தும் நல்ல [illegible] [illegible] தீர்ந்துபோகும். உடனே தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு பங்கீட்டு அதிகாரிகளை கேட்டுக்கொள்ளுகிறோம்.

எஸ். தாவுத்சாயுபு

பட்டாபிராம்

ஐரோப்பாவுக்கு பொது கரன்ஸி?

ஷூமன் திட்டத்தின் விளைவு

[illegible], ஜூன் 30—

மேற்கு ஐரோப்பாவின் இரும்பு நிலக்கரி தொழிலை ஒரு பொது [illegible] கீழ் கொண்டுவர ஐரோப்பிய நாடுகளுக்கு உதவும்படியான ஷூமன் திட்டத்தின் விளைவாக ஐரோப்பாவுக்கு ஒருபொதுகரன்ஸி ஏற்படலாம் என்று பிரெஞ்சு ஹை கமிஷனர் பிராங்கோய்ஸ்போன்ஸெட் இங்கு செய்த ஒரு பிரசங்கத்தில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:— ஷூமன் திட்டத்தினால் ஒவ்வொரு சர்க்காரின் ஆதிபத்யம் [illegible] என்று பிரிட்டன் கருதுவதாகத் தெரிகிறது. ஆனால் இத் திட்டத்தில் பிரிட்டன் ஒத்துழைக்க முன்வராததால் முடிவு முறிந்து போய்விடாது.

இரும்பு எஃகு நிலக்கரி சம்பந்தமான [illegible] இத் திட்டத்தை போட்டு விவசாயத் துறையிலும் இம்மாதிரி ஒரு திட்டம் ஏற்படலாம் என்றும் அவர் கூறினார்.

கூட்ஸ் ட்ரெயின் தண்டவாளத்தை விட்டிறங்கியது

கிழக்குப் பஞ்சாப் ரயில்வேயில் ஹிஸ்ஸார்-மால்கோட் அம்பாலா லைனில் பாடிண்டாவிலிருந்து புறப்பட்ட கூட்ஸ் ட்ரெயின் தூரி ரயில்வே ஸ்டேஷனில் நேற்று பிற்பகல் தண்டவாளத்தை விட்டிறங்கியதாக உத்யோக பூர்வமான அறிக்கை மூலம் தெரிகிறது. [illegible]ரும் காய[illegible]டையவில்லை.

தனி நாடு கோருவது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துவேஷந்தானே? வேண்டுமானால் அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள் நாமும் அப்படி முன்னேற வேண்டும் என்று எழுதலாம்.

மாஜிஸ்ட்ரேட்:— இங்கு கொடுமை என்றுதானே இருக்கிறது? அந்தக் கொடுமை இருப்பதாக வைத்துக்கொண்டால், அது இருக்கிறது என்பது தவறாகாதே' அது எப்படி வகுப்புத் துவேஷத்தைத் தூண்டுகிறது, என்று கருதுகிறீர்கள். திராவிடநாடு வேண்டும் என்கிறார் அந்தக் கருத்து மடமையானதாக இருக்கலாம் ஆனால், அது பிறர் மீது வெறுப்பைத் தூண்டுகிறது என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்?

பிறகு வக்கீல் தொடர்ந்து மூன்றாவது பகுதியாகிய.

"முன்பெல்லாம் ஜஸ்டிஸ் மாநாடுகள், உத்யோகத்திற்கு மனுப்போடும் பேனா முனைகளை தந்தது வாலிபர்களிடம்! "திருச்சியிலே வாலிபர் கரத்திலே தரப்பட்டது போர்வாள்!" திராவிடத்திலே படர்ந்துள்ள ஆரியக்கள்ளியை வெட்டி வீழ்த்த, வைதிகமென்ற பெயரால் வளைந்து நெளியும் வஞ்சனையைக் கூறுகூறாக்க மக்களின் மனதிலே குவிந்து கிடக்கும் மடமை எனும் கச்சக்கொடியை அறுத்தெறிய, ஜாதிபேதமெனும் முட்புதரை அழிக்க, விரைத்தழுவி வீணராக்கும் பழமைபெனும் கொடுமையைக் கொல்ல, திராவிடத்தை மீட்கப் போர்வாளைத் திருச்சியில் தீரத் திராவிடன் கரத்திலே தந்தது" என்பதைப்படித்துக் காட்டி. இது பலாத்காரம் என்றும் பிராமணர்களுக்கு எதிராகக் கத்தி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினார் அடுத்தப்பகுதி என்று 4-வதாக 91-வது பக்கத்திலுள்ள

"வெட்டுமா குத்துமா. இனி நம்மை விரைந்தோடிவரும் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே அமைந்துள்ள. ஊஞ்சலிலே உலாவவேண்டியவர்களாக இருப்போம் நை கைக்கரையிலே சென்ற கிழமை நடந்த அப்ளி, அறிவுறுத்தும் பாடம் அதுதான். நாம் இருக்கும்வரைக்கும் நமது ஆதிபத்தியத்திற்கு ஆபத்துதான் என்பதை, ஐயப்திரிமறந்துகொண்ட வாணாஸ்ரமம், நாம செத்தால் மட்டுமே, தான் இன்னுங் கொஞ்சகாலத்துக்கேனும் ஜீவித்திருக்க முடியும் என்று நன்கு தெரிந்துகொண்டு, நம்மைக் கொல்ல கோர நாட்டியம் செய்தது. நமது இரத்தத்தையும் கொஞ்சம் குடித்து ருசி பார்த்தது" என்ற பகுதியைப்படித்து வெட்டு, குத்து, ரத்த ருசி இவைகளை பெல்லாம் எழுதியுள்ளார் என்றும், இது பிராமணர் மீது தூண்டுவதே என்றும் கூறினார்.

மாஜிஸ்ட்ரேட்:— ஆரியர்கள் என்பது பிராமணர்கள்தானா?

சர்க்கார் வக்கீல்:— ஆம்; பிராமணர்களை ஆரியர் என்றும், அப்படியே ஏடுகளில் எழுதியுள்ளார்கள் என்றும், பார்ப்[illegible]ரல்லாதாரைத் திராவிடர் என்றும், பார்ப்பனரை ஆரியரென்றும் தென்னாட்டில் 30 அல்லது 40 வருஷங்களாக வழங்குகிறார்கள் என்றும் அப்படியே டிக்ஷனரியிலும் இருக்கிறதென்று இவை பிராமணருக்கு எதிரியாகத் தூண்டுவதென்றும் இவை 153-ஏ பிரிவுப்படி குற்றம் என்றும் கூறிமுடித்தார்.

முதல் எதிரியான சி. என். அண்ணாதுரை அவர்கள் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் நாராயணசாமி அவர்கள் தனது வாதத்தை ஆரம்பித்து ஆரியர்கள் என்பவர்கள் பிராமணர்கள்தான் என்ற அவசியம் இல்லை. ஏனென்றால் ஆரியர்கள் என்பது பிராமணர்கள் என்பதை விபரீதமானது. ஏனென்றால், சரித்திரப்படி பார்த்தாலும், ஆரியர்கள் ஐரோப்பா எங்கும் இருக்கிறார்கள். இங்குள்ள நிலையிலும் க்ஷத்திரியர் வைசியர் ஆகியோரும் ஆரியர் என்றே குறிக்கப்படுகின்றனர் சர்க்கார் தரப்பு வக்கீல் கூறுவதுபோல், வகுப்பு துவேஷத்தைத் தூண்டுவதற்கு எழுதிய நூலல்ல இது. 'திராவிட நாடு' பத்திரிகையில் 1944 முதல் 1946 வரை அவ்வப்போது எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்புத்தான் இது. மாநாடுகளைப்பற்றிய கருத்துரை இது. ஆசிரியரின் நோக்கம் வகுப்புத் துவேஷத்தைத் தூண்ட வேண்டுமென்பதல்ல சர்க்கார் தரப்பு வக்கீல் குறிப்பிடும் எந்தப் பகுதியும், வகுப்புத் துவேஷத்தைத் தூண்டுவதல்ல முதல் பகுதியிலே அண்ணாதுரை தேவையென்று குறிப்பிடப்பட்டுள்ளது யார்மீதும் சண்டைக்குப் போக அல்ல கழகப் பிரசாரத்தை நடத்துவவர்களுக்கு ஆக்கவேலைக்கு ஒரு அழைப்பு வலுவளவுதான் இரண்டாவது பகுதியாகிய "இந்தியா ஒரே நாடா?......" என்ற வாசகங்கள் முழு உண்மைகளின் படப்பிடிப்பு அது வகுப்புத் துவேஷத்தை வளர்ப்பதல்ல. இதில், திராவிட நாடு வேண்டும் என்பதற்குப் பத்துப் பதினைந்து காரணங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவற்றில், இங்குள்ள பிற்போக்குத் தன்மையின் நிலைமை விளக்கமே அது. சமுதாயத்திலே உள்ள பேதங்கள் அழிக்கப்பட்டு, ஒவ்வொருவருக்குரிய கலாசாரம், நாகரிகம், பழக்கவழக்கம் பாதுகாக்கப்படவேண்டும் என்றே கூறுகிறது பிறருக்கு வருவதற்கும் இடம் அளிக்கிறது. அவர்களை நாசப்படுத்த வேண்டுமென்று கூறப்படவில்லை. இது வகுப்புத் துவேஷத்தைத் தூண்டுவதாகாது பார்ப்பனீயம் என்பது, ஒரு ஏற்பாடு, ஒருமுறை, பலகாலமாக இருந்துவருவது. அது பிராமணர்களைக் குறிக்கும் என்பதல்ல. இதைக் கூறுவதாக, பிராமணர்கள் ஒழிக்கப்படுகிறார்கள் என்றும் கூறுபவர்களை வகுப்புவாதிகள் என்றும் கூற படுவதாகிறது. "பார்ப்பனீயம் [illegible] காலத்திலிருந்து தொ[illegible] வரும் [illegible] ஏற்பாடு [illegible] பதற்கு [illegible] விடநாடு' ஜ[illegible] எழு[illegible] கோர்ட் மீதி[illegible] கள [illegible] தீர்ப்பை படித்துக் காண்பித்தார். ஆரியர், என்ற இடத்திலெல்லாம் பார்ப்பனீயக்கைப் பின்பற்றும் மக்களையே ஆசிரியர் குறிப்பிடுகிறார். அந்தக் கோட்பாட்டை பின்பற்றும் பார்ப்பனரல்லாதாரும் அவர் என்னத்துக்கு உரியவர்கள் ஆகிறார்கள். அது ஒருகுலத் தக்கறிக்காது சமூக நீதி தேவை என்பதும். 'ஜாதி பேதம்' ஒழிய வேண்டும் என்பதுமே ஆசிரியர் கருத்து அடுத்த பகுதியில் கத்தி, போர்வாள் [illegible] என்று குறிப்பிட்டார். போர்வாள் என்பது, உலோகத்தாலானதல்ல. மாநாட்டிலே நடைபெற்ற போர்வாள் என்ற நாடகம், அந்தக் கருத்தை ஏற்றி வைத்திருக்கிறது. பழமை, கருத்துக் கோட்பாடு ஆகியவைகளை அழியுங்கள் என்றே ஆசிரியர் குறிப்பிடுகிறார். சொல்லலங்காரமாக எழுதப்பட்டுள்ளது. அது பார்ப்பனரைத் தாக்கிறது என்பது தவறு. அடுத்த பகுதியில் "குத்தும் வெட்டும்" என்று வரும் இடங்கள் மதுரையில் நடந்த ஓர் சம்பவத்தைப்பற்றிய விளக்கம். இவையெல்லாம் பிராமணரை குறிப்பிடுகிறது என்பது தவறு. இதே நூலில், 75-வது பக்கத்தில் ஆசிரியர், இதுபற்றி பார்ப்பனர்கள் என்ற ஆ[illegible] அவர்களின் வகுப்பு காரணமாக விஷமத்திற்காக் கண்டிக்கிறோம் என்று, தயவு செய்து எண்ணிவிட வேண்டாம். நாம் கண்டிப்பது 'பார்ப்பனீயம்' எனும் ஒருமுறையை என்று குறிப்பிட்டுள்ளார் திராவிடர்-ஆரியர் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன கால்டுவெல், வின்சென்ட் ஸ்மித் முதலிய பல அறிஞர்கள் எழுதியுள்ளார்கள் என்று, பல [illegible]ல்களைப் படித்துக் காட்டினார். இந்தப் பிரிவுப்படி இதிலே குறிப்பிட்டவை எதுவும் குற்றமாகாது. நாடு பிரியவேண்டும் என்பதில்கூட, இனத்திற்கு என்றே உள்ளது. இனம் என்பது Race ஆகும். அது வகுப்பு அல்ல என்றும் கூறி, தமது முடித்தார்.

பிறகு சர்க்கார் தரப்பு வக்கீல் எழுந்து தங்களுக்கு ஒரு நாடு வேண்டுமென்றால், அது பிடிக்காத பிராமணர்களுக்கு மற்றவர்களுக்கும் பகைமையையும், வெறுப்பையும் வளர்க்கும் என்றார்.

மாஜிஸ்ட்ரேட்:— நான் கோயம்புத்தூர் ஜில்லா, கவுண்டர்களுக்கு வேண்டும் என்று கேட்கிறேன் என்று வைத்துக் கொள்வோம், அது முட்டாள்தனமானதாக இருக்கலாம் ஆனால், அது மற்றவர்களுக்குத் துவேஷமானது என்பது எப்படி இருக்க முடியும்?

சர்க்கார் வக்கீல்:— இல்லை, பாகிஸ்தான் கோரிக்கைபோல கலகம் உண்டாக ஏதுவாகலாம். அதனால் குழப்பம் உண்டாகலாம்.

மாஜிஸ்ட்ரேட்:— சீக்கியர்கள் கூட தனி நாடு என்று கேட்கிறார்களே?

நாராயணசாமி:— ஜின்னா மீதுகூட 153-ஏ செக்ஷன்படி வழக்கு தொடர்ந்திருக்கலாமே!

சர்க்கார் வக்கீல்:— ஆம்; அதற்குள் பிரித்துக்கொண்டு போய்விட்டார்.

நாராயணசாமி:— அதுகாலமில்லை. ஜின்னாவும் இருந்தார். இந்தியன் பினல்கோடும் இருந்தது. சர்க்காருக்கு அங்கே அர்த்தத்தையும் [illegible] தீ நீங்கள் கூறுவதுபடி இருந்தால், பாகிஸ்தானைச் சொல்பவர்களும், யூதர்களும் தங்களுக்கே வேண்டும் என்று வாதாடுகிறார்கள். இருவர் மீதும் 153 ஏ செக்ஷன் போட வேண்டியதுதான் என்றார். பிறகு 2, 3வது எதிரிகள் சார்பில் வாதாடிய பார்த்தசாரதி நாயக்கர், அரசியலமைப்பில் கண்ட பேச்சுரிமை பாதுகாக்கப்படவேண்டுமென்றும். இதிலே துவேஷமில்லையென்றும், சுதந்தரம் சரியான முறையில் பயன்பட உரிமை இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

கடைசியாக, மாஜிஸ்ட்ரேட் ஜூலை 3-ந்தேதி [illegible] ன்று உத்தரவுகள் [illegible] ப்பிடப்படும் எனக் கூ[illegible] (க-ளி)

தி. மு. கழகச் சொற்பொழிவு[illegible]

2-7-50

குன்னூர் (நீலகிரி):—இரா. நெடுஞ்செழியன்

பெரம்பூர் (சென்னை):—சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன், அன்பழகன், அப்பாத்துரை.

மணத்திடல்:—டி. கே. சீனிவாசன், ஏ. கே. வேலன், தர்மலிங்கம், ஏ. சாவித்திரி.

தஞ்சாவூர்:—மு. கருணாநிதி.

நாமக்கல்:—எஸ் நெடுமாறன்.

3-7-50

களப்பூர்:—சி. பி. சிற்றரசு.

4-7-50

வளையர்பட்டி:—சி. பி. சிற்றரசு.

'இந்தோசீனாவை இழக்கமாட்டோம்'

பிரஞ்சு மந்திரி மிரட்டல்

பாரிஸ், ஜூன். 29—

ஜூன் 29-ம் தேதி இதன்மேற்கு பிரான்சில் கூடிய இந்தோ சீனா நாடுகளின் மாநாட்டில் பேசிய, கடல் கடந்த நாடுகளின் அமைச்சர் தோழர் ஜீன் லெட்டர்னோ. பிரான்ஸ், இந்தோ சீனாவை இழக்காது என்று பிட்டமாகக் கூறியிருக்கிறார்.

"உங்களுடைய சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும். உங்கள் சுதந்திர ராஜ்யங்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது." என்று கூறி, வியட்மின் தலைவர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்.

மாற்றுக் கட்சிகள் மாநாடு

சோஷலிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் தோழர் ஜயப்பிரகாஷ் நாராயண் முயற்சியால் கூட்டப்பட இருக்கும் மாற்றுக் கட்சிகள் மாநாடு பம்பாயில் ஜூலை 1-ந் தேதியில் நடைபெறும். மாநாட்டுக்கு டாக்டர் பி. ரகுநாத் பராஞ்சபே தலைமை வகிப்பார்.

சக்களத்தி 'காய்ச்சல்'

லண்டன், ஜூன் 30—

மிடில்ஸெக்ஸில் வசிக்கும் ஒருவர் தன் மனைவியை விவாகரத்து செய்துகொண்ட பின்பும் அவளை வீட்டிலேயே ஒரு பகுதியில் வசிக்க அனுமதித்தார். அவருடைய புது மனைவிக்கு இதனால் தேச அசௌகர்யம் ஏற்பட்டதாம் உடனே அவர் தன் மாஜி மனைவியை வெளியேற்ற கோர்ட் மூலம் உத்தரவு பெற்று அவளை வெளியேற்றினார். —ருனேப்

இனி நடப்பவை

சென்னை:—திருவள்ளுவர் கழகத்தின் சார்பில், க. பதுமநாபன் அவர்கள் திருக்குறளில்—"தெவிட்டா செல்வம்" என்னும் பொருள்பற்றிப் புரசை, வைக்கோல்காரன் தெரு, நகராண்மைக் கழகப் பள்ளியில் 2—7—50 மாலை 6-30-மணிக்குப் பேசுவார்.

சென்னை:— காசிபுரம் மீன் பிடிப்போர் கூட்டுறவு சங்கத் தொடக்கவிழா, 2—7—50 மாலை 5-30 மணிக்கு, தண்டையார்பேட்டை காசிபுரம் மீன் பிடிப்போர் சங்கத்தின் எதிரில், நடைபெறும். தோழர் கே. என். அனந்தராமன் தலைமைவகிப்பார். தோழர்கள் கே. ஆர். கிருஷ்ணசாமி ஐயர், என். ஜீவரத்தினம் எம். சி., கே. குப்புராஜ் எம். குப்புசாமி ஆகியோர்கள் 'மீன் பிடிப்போரும், கூட்டுறவு சங்கமும்" என்பதைப் பற்றிப் பேசுவார்கள்.

நாடகம்:— 2—7—50 ஞாயிறு மாலை 6-15-மணிக்கு வி. பி. ஹாலில், எம். கே. நடராஜ் பி.ஏ. பி. ராமானந்தம் ஆகியோர் தலைமையில் "அஞ்சலா" என்னும் நாடகம் நடைபெறும், நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன், தோழர் க. அன்பழகன். எம். ஏ., ஏ. எஸ். டி. எப். ரோட்ரிகஸ் எம். எல். சி. ஆகியோர் பேசுவர்.

சென்னை:—3—7—50 மாலை 6 மணிக்கு ஓட்டேரி மிரிக்லின் ரோட் 21 வது எண்ணுள்ள கழக மனையில் தி. மு. க. சார்பில் சொற்பயிற்சி நடைபெறும். தோழர் எம். மூர்த்தி தலைமைவகிப்பார். தோழர்கள் எம், ஷண்முகம். எஸ். ராமலிங்கம், ஏகாம்பரம். வி. சுப்பிரமணி. ஷண்முகம், கணேசன், ஆர். எம். தாஸன். வெங்கடேசன், வி. கி. [illegible]கிருஷ்ணமூர்த்தி. ஆகியோர் 'சுதந்திரப்பு' என்பதுபற்றிப் பேசுவர்.

சென்னை அயனவரம்:—'குமரி' தமிழ்ச் சேவா நாடக மன்றத்தின் செயற்குழுக் கூட்டம், 1—7—50 மாலை 6 மணிக்கு நடைபெறும் அதுபோது, 'நந்த நாள்' எனும் புரட்சி நாடகத்திற்கு நடிகர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். நடிக்க விருப்பமுள்ள தோழர்கள் கலந்து கொள்ளலாம்.

இஸ்ரேலை ஆப்க[illegible] அங்கீகரிக்க[illegible]

மாக்நாத், [illegible]

ஆப்கானிஸ்தான் [illegible] யே தொடர்[illegible] வரும் என்றும் [illegible] களை அங்கீகரிக்க[illegible] இல்லை என்றும் அ[illegible] சர்தார் திஹ்யா[illegible] 'ஜோப்' பத்திரிகைக்க[illegible] யில் கூறினார்.

...ண்ணாமலையில் ...அண்ணாத்துரை

...நகராண்மைக்கழகத்தின் வரவேற்பு

தி. மலை, ஜூன் 28—

26—6-50 திங்களன்று காலை 10-மணிக்கு ஆரணியிலிருந்து, சர்முகம் நடிப்பு புலவர் ராமசாமி, காஞ்சி செல்வாண சுந்தரம், புட்டாசாமி, கோனு சுப்ரமணியம் ஆகியோருடன் தோழர் அண்ணாத்துரை அவர்கள் திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தார்கள். தோழர் ப. உ. சண்முகம் அனைவரையும் அழைத்துக்கொண்டு நகராண்மைக் கழகப் பெண்கள் உயர்நிலை பாடசாலைக்குச் சென்று அங்கு வந்துள்ள பல பிரமுகர்களை குறிப்பாக நகராண்மைக் கழக ஆணையாளர் தோழர் எம். கே. சரணம், தோழர் தங்கவேலு பிள்ளை எம். எம். ஏ., தோழியர் குப்தா (பெண்கள் உயர்தர பாடசாலை தலைமை ஆசிரியை) நகராண்மைக் கழக உறுப்பினர்கள் ஆகியோரை அறிமுகம் செய்து வைத்து மேடைக்கு அழைத்துச் சென்றார். கூட்டம் அறிவித்தபடிகாலை தலைவர்கள் மேடைக்குச் சென்றது கூட சிறிது தடைப்பட்டது.

உடனே தோழர் ப. உ. சண்முகம் நகராண்மைக் கழக வரவேற்பை வாசித்து வெள்ளிப் பேழையில் வைத்துத் தந்தார். அத்துடன் அண்ணா அவர்களை பெண்கள் உயர்தரப் பாடசாலையின் புதிய கட்டிடத்திற்குக் கல் நாட்டும்படி வேண்டிக்கொண்டார்.

பதிலளிக்கும் முகத்தானும் மேல் கல்விக்கு வலியுறுத்தியும் தோழர் அண்ணாத்துரை பேசியதாவது:—

நகராண்மைக் கழக வரவேற்பிற்கும் அதில் கூறியுள்ள நல்லுரைகளுக்கும் நன்றி செலுத்துகின்றேன். நகராட்சியின் வரவேற்புகளில் கூறப்பட்டவைகளில் அனைத்தும் ... தொண்டில் ... நான் ... பெண்கள் ... மிகவும் மகிழ்கிறேன். பொதுவாக நகரசபைகளில் ஒத்துழைப்பின்மையும் அதன் காரணமாக ஆட்சி... பெரிதும் பத்திரிகைகளில் பார்க்கிறோம். இந்நகரசபை அப்படியில்லாதிருப்பது எனக்குப் பெருமகிழ்ச்சியை அளிக்கிறது. ... பெண்கள் உயர்தர பாடசாலை ... சொற்பமாகக் குறைந்திருக்கிறது. அதேபோல், நம் சமூகத்தில் ... பெண் சமூகத்திற்கு கல்வியில்லை ... திருப்பதி நாட்டின் ... என்று பேசினார்.

பெண்கள் உயர்தரபாடசாலையில் ... கல்வித்துறையில் ... என்று கூறி முடித்து புதிய கட்டிடத்திற்குக் கல்நாட்டினார். பின் ... பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகள் ... நன்றி ... இனிது முடிந்தது.

...விரட்டப்படுகின்றனர்

...ரோம், ஜூன் 30—

... 600 கன்னி... 332 பாதிரி... வெளியேற... வாடிகன் ...

—ஏ. பே.

சென்னைக்கு 1200 டன் அரிசி

சென்னை, ஜூன் 30—

சென்னை மாகாணத்திலுள்ள பற்றாக்குறை ஜில்லாக்களுக்கு ஜூலை மாதத்திற்கான அரிசி கோட்டாவை சர்க்கார் நிர்ணயித்திருக்கின்றனர்.

சென்னை நகருக்கு தஞ்சாவூர் நெல்லூர் இந்த ஜில்லாக்களிலிருந்து 1200 டன் அரிசி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் 560 டன் பச்சரிசி, 640 டன் புழுங்கலரிசி இந்த 1200 டன் அரிசியும் டி. யூ. வி. எஸ். க்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவை தஞ்சாவூரிலிருந்தும், நெல்லூரிலிருந்தும் வரவழைக்க அந்த ஜில்லாக்களின் ஜில்லா சப்ளை அதிகாரிகளிடம் அனுமதி பெற்று டெலிவரி செய்ய வசதி செய்து கொள்ளும்படி டி. யூ. வி. எஸ். க்கு அறிவிக்கும்படி கலெக்டருக்கு சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

மதுரைக்கு 4100 டன் அரிசி திருநெல்வேலிக்கு 6100 டன் ராமநாதபுரத்திற்கு 6200 டன் இம்மாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக இந்த ஜில்லாக்களுக்கு அரிசி தஞ்சை ஜில்லாவிலிருந்துதான் கிடைப்பது வழக்கம். ஆனால் அங்கே இந்தளவு போதிய ஸ்டாக் இல்லாததால் இந்த ஜில்லாக்களுக்குத் தேவையான அரிசியில் ஒரு பகுதி சென்னை ராஜ்யத்தில் வடக்கிலுள்ள டெல்டா ஜில்லாக்களிலிருந்து அனுப்பப்படும்.

ஜூலை மாதம் வெளிநாடுகளிலிருந்து 11000 டன் அரிசி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 8000 டன் சென்னை துறைமுகத்தில் வந்திறங்கும். இந்த அரிசி முழுவதும் மலபார் ஜில்லாவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள 3000 டன் சென்னை துறைமுகத்தில் வந்திறங்கும். இதில் செங்கற்பட்டுக்கு 900 டன் கோவைக்கு 1500 டன், எஸ். ஐ. எம். ரயில்வேக்கு 600 டன் ஒதுக்கப்படும்.

மேற்கு வங்காளத்திலிருந்து 3500 டன் அரிசி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் செங்கற்பட்டுக்கு 2930 டன்னும் தென்னிந்திய ரயில்வேக்கு 80 டன்னும், எம். எஸ். எம். ரயில்வேக்கு 570 டன்னும் கிடைக்கும்.

இதர ஜில்லாக்களுக்கு அரிசி ஒதுக்கப்பட்டுள்ள விவரம்.

அனந்தபூர் 100 டன், பெல்லாரி 500 டன், சித்தூர் 1200 டன், வடஆர்க்காடு 3000 டன், நீலகிரி 300 டன், தென் கன்னடம் 4000 டன், சேலம் 3200 டன்.

எம். ஐ. ஆர். எம். எஸ். எம். ரயில்வேக்களுக்கு இம்மாதம் ஒதுக்கப்பட்டுள்ள கோட்டாவை தவிர மாதா மாதம் வழக்கமாக கொடுக்கப்படும் அரிசி கொடுக்கப்படும்.

நன்றாக தேயிலை பானம் தயாரிப்பதெப்படி?

லண்டன், ஜூன் 29—

நன்றாகத் தேயிலை பானம் தயாரிப்பதெப்படி என்பதை விளக்கி ஒரு அறிக்கை ... வெளியிட்டிருக்கிறது. அதாவது:—

(1) நல்ல தேயிலை தண்ணீரை உபயோகிக்க வேண்டும். (2) நன்றாகக் கொதித்த தண்ணீரை உபயோகிக்க வேண்டும். (3) ஒரு தரம் கொதிக்கவிட்ட தண்ணீரை மறுபடியும் கொதிக்க வைத்து உபயோகிக்கக் கூடாது. (4) தேயிலையை தண்ணீரில் போட்டு கொதிக்கவிடாமல் ... உள்ள பாத்திரத்தில் ... வேண்டும்.

நரைமயிர் கருக்க வழி

லண்டன், ஜூன் 30—

நரைமயிரைக் கருக்கும்படி செய்வதற்கான வழியை ஒரு லண்டன் டாக்டர் விஞ்ஞானி கண்டுபிடித்திருக்கிறார். ஆனால் ஜெனரல் மெடிகல் கவுன்சிலின் விதிகளின்படி அவர் தன் பெயரை வெளியிட முடியாமல் இருக்கிறார்.

... மாத்திரைகளை ... சாப்பிட்டதினால் பலருக்கு நரைமயிர் கருத்திருக்கிறது என்று இவர் கூறுகிறார். ... வைட்டமின் 'வி' மாத்திரைகளை உட்கொண்டவர்களின் நரைமயிர் எல்லாம் கருத்து விட்டதாம். இதை முதலில் கவனித்த இவர் வைட்டமின் 'வி' உள்ள மாத்திரைகளைத் தயாரித்தாராம்.

இப்படி மாத்திரை சாப்பிட்டு ... கருக்கும் மயிர் ... கருப்பாக இருக்குமா என்பதை இதற்குச் சொல்ல முடியாதென்றும் இந்த ஆராய்ச்சியை வசதிகள் உள்ள ஸ்தாபனம் எடுத்து நடத்த வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

வைட்டமின் 'வி' மாத்திரைகள் சோதி ... வியாதிகளுக்காக உட்கொள்வது வழக்கம் என்றும், ... இம்மாத்திரைகள் நீண்ட ... வைட்டமின் 'வி' ... உட்கொள்ளுவதன் மூலம் வைட்டமின் 'வி' ... என்றும் அவர் எச்சரிக்கிறார்.

திருமண அழைப்பு

2—7—50 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு

K மதுரை அவர்கள் திருமகன் K M ஏழுமலைக்கும்	N S ஆறுமுகம் அவர்கள் மகள் A கோகிலாவுக்கும்

சென்னை செம்பியம் பேல்பட்டாளை SSV கோவில் தெருவில் 25 இல்லத்தில், S C C அந்தோணி M.C., அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். மா. இளஞ்செழியன் B. A. (Hons) N ஜீவரத்தினம் M.C., ஆகியோர பேசுவர். K. M. சித்தரை.

முக்கால் நிர்வாணம்

ஆட்டவா, ஜூன் 30—

கனடா தலைநகரான ஆட்டவாவில் முக்கால் நிர்வாண உடையுடன் யுவதிகள் தெருக்களில் நடமாடுகின்றனர்.

இது மக்களின் ஒழுக்கத்தைக் கெடுக்க வழி செய்யும் என்று ரோமன் கத்தோலிக ஸ்தாபனம் ஒன்று கூறி இதைத்தடைசெய்யுமாறு நகர கௌன்சிலைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

ஆனால் கத்தோலிக்கர்களை இவ்விஷயத்தில் பிராட்டெஸ்டென்ட் எதிர்க்கமுடிவு செய்திருக்கின்றனர். இம்மாதிரி உடைகளில் வெளியே வரக்கூடாது என்று தடுப்பது சுதந்திரத்தையும் உரிமையையும் மதிப்பதாகு... அத்துடன்மட்டுமின்றி ம... இருப்பது ... விஷயத்தை ... என்று இவ... ... இம்மாதிரி ... பெண்கள் ... ... நடமாடுவதை ... ஆட்சேபிக்கவில்லையே என்றும் பிராடெஸ்டண்டுகள் கூறுகிறார்கள்.

கத்தோலிக மெஜாரிட்டியுள்ள மாண்ட்ரீல், கியூபெக் நகரங்களைத் தங்கள் முனிசிபல் பிரதேசங்களில் பெண்கள் முக்கால் நிர்வாண உடையுடன் நடமாடக்கூடாதென தடை விதித்திருக்கிறது.

ஏஜெண்டுகள் தேவை

நமது "மாலைமணி"யை விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் கீழ்க்கண்ட இடங்களுக்கு தேவை

தஞ்சை, வேலூர்,

நாகை

மானேஜர்:—"மாலைமணி"

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1